**ஐரோப்பிய சமூகத்தால் நிதியிடப்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக்கட்டியெழுப்புதல் செயற்திட்டம் - கூறு "சீ" இன் (வீதிப் புனரமைப்பு மற்றும் புனர் நிர்மாணம்) 2012**

---

## 1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழும் சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகக் காட்டுகின்றன என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி வழங்கப்பட்டதோ அதன் பொருட்டே அது பயன்படுத்தப்பட்டன என்றும்,

(இ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும்,

(ஊ) மானிய உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயற்திட்டச் செலவினம் ரூபா 24,699,865 ஆனதுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவறாான திரண்ட செலவினம் ரூபா 9,597,663,014 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான

செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்றை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| வகுதி | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| பூர்த்தியான சிவில் வேலைகள் | 11,701,927 | 118,798 | 9,592,369,841 |
| நிர்வாகக் கிரயம் | இல்லை | இல்லை | 5,293,173 |
| தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | 12,997,938 | 245,805,224 | இல்லை |
| | 24,699,865 | 245,924,022 | 9,597,663,014 |

## 2.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் ஆண்டின்போது வெளிநாட்டு மானியம் கிடைக்கபெறவில்லை. ஆகவே, மீளாய்வாண்டின்போது கட்டுநிதி நிதியக் கணக்கு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் நிதியளிப்பு பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் இறுதி வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | மானிய உடன்படிக்கையில் வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | 2012 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் ---------------------- மீளாய்வாண்டின் போது | 2012 திசெம்பர் 31 வரை | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ அ டொலர் மில் | ரூபா மில் | ஐ அ டொலர் மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| ஐரோப்பிய சமூகம்/ ஆசிய அபிவிருத்தி வங்கி | 69.20 | 7,599.91 | - | - | 67.02 | 7,471.84 |
| இலங்கை அரசாங்கம் | 1.06 | 2,687.08 | 25.00 | 24.69 | - | 2,125,.82 |
| மொத்தம் | 70.26 | 10,286.99 | 25.00 | 24.69 | 67.02 | 9,597.66 |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

உசாத்துணையாளர்களின் செயற்திறன் அறிக்கை மற்றும் கிடைக்குமாறு செய்யப்பட்ட ஏனைய தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களது மதிப்பிடப்பட்ட கிரயம், மேலதிக வேலைகளின் பெறுமதி மற்றும் மொத்தக்கிரம் என்பன தொடர்பான சில குறிப்பிடத்தக்க புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஒப்பந்தம் | மூல ஒப்பந்தத்தின் பிரகாரமான வேலைகளின் பெறுமதி | மேலதிக வேலைப் பெறுமதி | ஐரொப்பிய சமூகத்தால் செலவிடப்பட்ட மொத்தக் கிரயம் - 2102 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| மாத்தறை – வெல்லவாய வீதி ஐசிபீ/சீ 4 (158 கி.மீ.) | 4,198 | 1,544 | 6,378 |
| சியம்பலாண்டுவ – பொத்துவில் - அக்கறைப்பற்று வீதி - ஐசிபீ/3 (78 கி.மீ.) | 3,487 | 1,008 | 2,882 |
| மொத்தம் | 7,685 | 2,552 | 9,260 |

சியம்பலாண்டுவ – பொத்துவில் - அக்கரைப்பற்று வீதிக்குப் பகுதியளவில் நிதியிடப்பட்டிருந்த அதேநேரம் மாத்தறை- வெல்லவாய வீதிக்கு முற்றிலும் ஐரொப்பிய

சமூகத்தால் முழு நிதியும் வழங்கப்பட்டது. உசாத்துணையாளர்களின் செயற்திறன் அறிக்கையின் பிரகாரம், குறித்த வீதிகள் பின்னர் 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேலதிக வேலைகள் மேற்கொள்ளப்பட்டமையால் ஒப்பந்தத்தின் மொத்தக் கிரயம் மூல ஒப்பந்தத்திலும் பார்க்க 33% அதிகரித்திருந்தது.

## 4. செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவு செய்தல்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட நடவடிக்கைகள் முடிவடைந்திருந்தன. எம்ஓபீஎச்சின் கீழ் 2011 ஆம் அண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டிலிருந்த ரூபா 25 மில்லியன் வரவு, செலவுத் திட்ட நிதியேற்பாடுகளிலிருந்து 2011 மார்ச் 30க்கு முன்னர் தகுதியுடைய சகல செலவினங்களும் கோரப்பட்டு மீளப்பெறப்பட்டும் இருந்தது. மேலும் 2011 மே மாதத்தில் உசாத்துணையாளர்களால் செயற்திட்ட முடிவு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.